**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.109** **நாள்: 24.07.2024**

**அம்பத்தூர் மண்டலத்தில் ரூ.36 இலட்சம் மதிப்பில் சிவா விஷ்ணு குளம் புனரமைக்கப்பட்டு, மக்கள் பயன்படுத்தும் வகையில் சீரமைக்கப்பட்டுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் மழைநீரை சேகரிக்கின்ற வகையில் நீர்நிலைகளை மேம்படுத்தும் வகையில் மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள், நீர்நிலைகளை புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் மண்டலம், வார்டு-82க்குட்பட்ட கருக்கு பிரதான சாலை, டி.என்.பி.காலனியில் உள்ள சிவா விஷ்ணு குளம் தற்போது ரூ.36 இலட்சம் மதிப்பில் புனரமைத்து சீரமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குளம் 224 சதுர மீட்டர் பரப்பளவில் 90.96 மீ. சுற்றளவில் 2.5 மீ. ஆழம் கொண்டது. இந்தக் குளத்தைச் சுற்றிலும் இருந்த புதர்ச்செடிகள், குளத்தில் படர்ந்திருந்த செடிகள், கழிவுகள் மற்றும் ஆக்கிரமிப்புகள் ஆகியவை அகற்றப்பட்டு, தூர்வாரப்பட்டுள்ளது. மேலும், குளத்தைச் சுற்றி சுற்றுச்சுவர், சாய்தள வசதியுடன் நுழைவுவாயில், இரண்டு கழிவறைகள், நடைபாதை, குளத்தைச் சுற்றிலும் கைப்பிடி தடுப்புகள், காவலர் அறை, விளக்குகள் மற்றும் மின்வசதிகள், அழகிய வர்ணம் பூசப்பட்ட இருக்கைகள், புதிதாக நடப்பட்ட செடிகள் மற்றும் மரக்கன்றுகள், குளத்திற்கான நீர் வருகை மற்றும் நீர் வெளியேறும் கட்டமைப்புகள் போன்றவை அமைக்கப்பட்டுள்ளது.

பசுமைப்பரப்பை அதிகரிக்கும் வகையிலும், சுற்றுச்சூழலுக்கு உகந்தவகையிலும் சீரமைக்கப்பட்டுள்ள இந்தக் குளம் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி